**சனாதிபதி நிதியம் - 2021**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சனாதிபதி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

நிதிக்கூற்றுக்களில் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய

விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | (i) | 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தின் 3 ஆவது பந்தி | 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதிய அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், கட்டுப்பாட்டுச் சபையொன்று காணப்பட வேண்டியதுடன், சபையின் கூட்டங்கள் தொடர்பிலான செயல்வழிக் கோவையும், அந்தக் கூட்டங்களின் பணிகளும் சபையினால் முறையாக மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், சனாதிபதியின் கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டங்கள் 2019 ஒக்தோபர் 18 ஆந் திகதி இறுதியாக நடாத்தப்பட்டிருந்ததுடன், அத்திகதியின் பின்னர் கணக்காய்வுத் திகதியான 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2019.12.17 அன்று கட்டுப்பாட்டுச் சபை நடாத்த திட்டமிடப்பட்டிருந்தாலும் அது காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் கட்டுப்பாட்டுச் கூட்டத்தை நடத்துவது தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து திகதி மற்றும் நேரத்தைப் பெறுவதற்கு பல தடவைகள் முயற்சித்த போதிலும், நாட்டில் நிலவும் கொவிட் நிலைமை காரணமாக அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை |
| | (ii) | 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தின் 6 ஆவது பந்தி | 6 ஆம் பந்தியின் பிரகாரம், நிதியத்திற்குச் சொந்தமான நிதி, சபையினால் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் சனாதிபதியின் ஏற்பாடுகளின் கீழ் பயன்படுத்தப்பட முடியுமான போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 1,403,094,031 ஆன கொடுப்பனவுகளுக்காக கணக்காய்வுத் திகதியான 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. | கோவிட் தொற்றுநோய் நிலைமையின் கீழ் கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தை நடத்துவதற்கான திகதியை நிர்ணயிப்பது கடினமாகிவிட்டது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை |
| (ஆ) | | நிதிப்பிரமாணம் 372 | இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் பேணப்படும் ரூபா 6 மில்லியனான | தென்னிந்தியாவில் உள்ள இலங்கை ஜனநாயக சோசலிச | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டுநிதி மீதியொன்று 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அந்த அலுவலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குடியரசின் துணை உயர் ஸ்தானிகர் 2022 அக்டோபர் 11 தேதியிட்ட கடிதம் மூலம் நிலுவைத் தொகையை உறுதி செய்திருந்தார். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (இ) | 2018 இன் யூலை 26 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சனாதிபதியினால் நிர்ணயிக்கப்படும் விசேட செயற்திட்டங்கள் தொடர்பில் நிதி சேகரித்தல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக நிதியத்தினால் இலங்கை மத்திய வங்கியில் பேணிச் செல்லப்படும் 51204 (46078) ஆம் இலக்க வங்கிக் கணக்கு 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செயலற்ற நிலையில் பேணப்பட்டு வருவதுடன் அது தொடர்பாக நிதியத்தினால் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அதிமேதகு சனாதிபதி அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட விசேட செயற்திட்டங்களுக்கு நிதி திரட்டுதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக 51204 ஆம் இலக்க கணக்கு பேணப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,708,287,273 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கொத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 1,338,345,661 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 369,941,612 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவினத்தினால குறைவு ரூபா 496,100,986 ஆல் அல்லது 26 சதவீதத்தால் அதிகரித்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 47 சந்தர்ப்பங்களில் மருத்துவ உதவி விண்ணப்பங்கள் கிடைத்து 09 மாதங்கள் முதல் 03 வருடங்கள் 09 மாதங்கள் | கோவிட்-19 தொற்று நிலைமை காரணமாக, ஊழியர்களை அழைப்பதும், ஆவணங்களை அனுப்புவதும் பெறுவதும் | மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் விரைவு படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் தாமதித்து மீளாய்வாண்டின் போது ரூபா 7,792,730 ஆன மருத்துவ உதவிகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தடைபட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக 31 சந்தர்ப்பங்களில் ரூபா 2,015,300 கூட்டுதடதொகையான விண்ணப்பங்கள் கிடைத்து 02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் 08 மாதங்கள் வரையான கால வீச்சில் தாமதித்து கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, மருத்துவமனை தகவலை உறுதிப்படுத்த ரசீதுகளை மீண்டும் அனுப்ப வேண்டியிருந்தது மற்றும் ஆவணங்களை அனுப்புவதும் பெறுவதும் தடைபட்டது இந்நிலைமைக்கு காரணமாக காணப்பட்டது. | மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் 15 நோயாளர்களுக்கு மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் நோயாளர்களினால் அதற்கான மருத்துவப் பற்றுச்சீட்டொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. நோயாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கு உட்பட விபரங்கள் அவர்களின் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டிருந்த விபரங்களுடன் இனங்காமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அக்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | தற்போது, அது தொடர்பான மருத்துவ உதவித் தொகையை மீட்டெடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. | மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | நலன்புரி செயல்பாடுகளின் கீழ் உள்ள கருணை அடிப்படையிலான படிகளை செலுத்துவதற்காக குறிப்பிட்ட அளவுகோல்களை நிதியத்தினால் அறிமுகப்படுத்தவில்லை என்பதுடன், மேலும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ | 1978 இன் 7 ஆம் இலக்க சனதிபதி நிதிய அதிகாரச்சட்த்தின் 06(உ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிமேதகு சனாதிபதியின் விருப்பின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | செலவினங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள சனாதிபதியின் கட்டளையை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உதவிகளை வழங்கும் நடைமுறையிலிருந்து விலகி 07 பயனாளிகளுக்கு பல்வேறு நோய்களுக்கான மருத்துவ சிகிச்சையைப் பெறுவதற்காக மொத்தமாக ரூபா 5,500,075 தொகை நிதியத்தினால் செலவிட்டுள்ளது. இந்த கருணை அடிப்படையிலான கொடுப்பனவுகளாக சேர்க்கப்பட்பட தொகையினுள் ஜனாதிபதியின் உத்தரவு இன்றி 03 பயனாளிகளுக்கு ரூபா 2,393,909 மருத்துவக் பட்டியல்கள் செலுத்தப்பட்டது. | | |
| (உ) | மத, கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தகுதிபெறும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் மற்றும் சிறப்புத் திட்டங்களுக்கு மீளாய்வாண்டின் போது பணம் எதுவும் செலுத்தப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில், நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, அணிவகுப்பு போன்ற கலாச்சார நிகழ்வுகள் நடத்தப்படவில்லை மற்றும் பள்ளி நடவடிக்கைகள் சரியாக இயங்காததால், கல்வி மற்றும் சிறப்புத் திட்டங்களை வழமை போல் மேற்கொள்ள முடியவில்லை. | நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஊ) | சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியிலிருந்து பயன்படுத்தக்கூடிய செயல்பாடுகள் குறித்த மதிப்பாய்வின் கீழ் ஆண்டிற்கான உடல் மற்றும் நிதித் தகவல்களைச் சேர்க்க செயல் திட்டம் தயாரிக்கப்படவில்லை. மீளாய்வாண்டுக்காக தயாரிக்கப்பட்ட செயற்திட்டத்தின்படி, இந்த நிதியத்தினால் ரூபா 08 மில்லியன் செலவிடப்படும் 02 செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஒக்தோபர் 06 ஆந் திகதி வரையிலும் அந்த பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. | நாட்டில் நிலவும் கோவிட் சூழ்நிலையின் கீழ் குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் சுழற்சி முறையில் பணிக்கு அழைக்கப்பட்டதால், புதிய கொள்வனவு எதுவும் இடம்பெறவில்லை மற்றும் புதிய எண்ணக்கருக்கல் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 139.16 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், கடந்த வருடத்தில் அதற்காக ரூபா 473.17 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதியங்களின் பயன்பாடு ரூபா 334 மில்லியனான அல்லது 71 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. | கோவிட்-19 தொற்று நிலைமை காரணமாக, ஊழியர்களை அழைப்பதும், ஆவணங்களை அனுப்புவதும் பெறுவதும் தடைபட்டிருந்தமையால் இந்நிலமை ஏற்பட்டிருந்தது. | நிதியத்தின் மூலம் பெறப்படும் மருத்துவ உதவி கோரிக்கைகளை உடனடியாக செலுத்த ஏற்பாடு செய்தல். |
| (ஆ) | மீளாய்வாண்டில், இதய அறுவை சிகிச்சை, புற்றுநோய், மூளை தொடர்பான நோய்கள், முழங்கால் மற்றும் இடுப்பு தொடர்பான நோய்கள், சிறுநீரக நோய்கள் மற்றும் பிற சிகிச்சைகளுக்கு 6214 நோயாளிகள் மருத்துவ உதவி கோரியிருந்தனர், ஆனால் 1322 நோயாளிகள் மட்டுமே மருத்துவ உதவி தொகையைப் பெற்றுள்ளனர். கடந்த வருடம் இவ்வாறான நோய்களுக்காக 1684 நோயாளர்களுக்கு மருத்துவ உதவிகளாக பணம் செலுத்தப்பட்டுள்ளது. இதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின் போது மருத்துவ உதவிகளை செலுத்திய நோயாளர்களின் எண்ணிக்கை 362 இனால் அல்லது 21 சதவீதத்தால் குறைந்துள்ளதுடன், 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மருத்துவ உதவிகளை செலுத்திய நோயாளிகளின் எண்ணிக்கை 5,064 அல்லது 79 சதவீதத்தால் குறைந்துள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |